2023 அக்டோபர் 10] [திரு. மு.க. ஸ்டாலின்]

வழக்குகளில் இருந்து வெளிவரும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது. இவர்களுள், வரி விதிப்பை ஏற்றுக் கொண்டிருப்பவர்களும், வரி விதிப்பை ஏற்றுக் கொள்ளாமல் மேல் முறையீடு செய்து இருப்பவர்களுக்கும் எனத் தனித்தனியாக நடைமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்தின் மேலும் ஒரு முக்கியச் சலுகையாக, நிலுவைத் தொகையினை வணிகர்கள் கட்ட முன்வரும் நாள் வரை அவர்களது கணக்கில் ஏற்றப்பட ஏதுவான திரண்ட வட்டித் தொகையும் (Accrued Interest) முழுவதுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் வணிகப் பெருமக்களின் நீண்ட நாள் எதிர்பார்ப்பை நிறைவு செய்யும் வகையில் செயல்படுத்தப்பட இருக்கும் இந்தத் திட்டம், வரும் 16-10-2023 முதல் நடைமுறைக்கு வரும். நான்கு மாத காலம் நடைமுறையில் இருக்கும். அதாவது 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி 15 ஆம் தேதி வரை இந்த சமாதான் திட்டம் நடைமுறையில் இருக்கும்.

அரசின் இத்தகைய முன்னோடி முயற்சியை முழுமையாக வணிகர்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்றும், நிலுவையில் உள்ள வழக்குகளுக்குத் தீர்வு காண்பதோடு, தமிழ்நாடு அரசுக்குச் சேர வேண்டிய வருவாயையும் அளித்து, வணிகப் பெருமக்கள் மென்மேலும் தொழில் வளர்த்து வளம் பெற வேண்டும் என்றும் கேட்டுக்கொள்கின்றேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

4. புதிய வரி நிலுவைத் தொகை சமாதான் திட்டம் குறித்த வணிக வரித் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்பிற்கு நன்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் நன்றி தெரிவித்த பிறகு, நீங்கள் பேசலாம் இல்லையா? (குறுக்கீடு) பேரவை விதி 110-ன்கீழ் அறிக்கைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் ஓரிரு வார்த்தைகளில் நன்றி தெரிவித்த பிறகு, உங்களுக்கு நான் பேச வாய்ப்புத் தருகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ஜெகன் மூர்த்தி அவர்கள். ஓரிரு வார்த்தைகளில் நன்றி தெரிவித்து, முடித்துக்கொள்ளுங்கள்.

திரு. மு. ஜெகன் மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். ** *(குறுக்கீடு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், திரு. ஜெகன் மூர்த்தி, பேரவை விதி 110-ன்கீழ் அறிவிப்புக்கு நன்றி தெரிவிப்பதாக இருந்தால் தெரிவிக்கலாம். நீங்கள் பேசியது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

மாண்புமிகு உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள்.

முற்பகல் 11-15

***திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110-ன்கீழ் அறிவித்த அறிவிப்புகள் பல ஆண்டுகளாக வணிகப் பெருமக்களால் எதிர்பார்த்துக் கொண்டிருந்தவையாகும். அதிகாரிகளுக்கும், வணிகர்களுக்கும் உள்ள பிரச்சினையே இந்த விஷயங்கள்தான். அவற்றையெல்லாம் இன்றைக்கு ஒரே அறிவிப்பின் மூலமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தீர்த்து வைத்திருக்கிறார்கள். இதன் காரணமாக அதிகாரிகளுக்கு பணிச் சுமை இருந்தது. அந்தப் பணிச் சுமைகளின் காரணமாக வணிகர்களும், சிறு தொழிலதிபர்களும் சிரமத்திற்குள்ளானார்கள்; அதுதான் உண்மை. தற்போது அதற்கான தீர்வு கிடைத்துள்ளது. அதற்காக மாண்புமிகு முதலைமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதன்மீது ஒரேயொரு விஷயத்தைக் கூற விரும்புகிறேன். கடைசி 3 பிரிவுகளுக்குக் குறிப்பிட்ட விகிதம் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். குறிப்பிட்ட விகிதம் என்று அறிவித்தால், தவறுகள் நடப்பதற்கான வாய்ப்புகள் அதிகமாக இருக்கின்றன. அரசாங்கமே ஒரு குறிப்பிட்ட விகிதத்தை நிர்ணயம் செய்தால். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர், தயவுசெய்து வரவேற்று அமர்கிறேன் என்று கூறினாலே மிகவும் சந்தோஷம்.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு பரிந்துரை மட்டும்தான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்னும் விவாதம் இருக்கிறது. அதன்மீது நீங்களும் பேச வேண்டிய வாய்ப்புள்ளது.

திரு. ஈ.ஆர். ஈஸ்வரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவ்வாறு செய்ய முடியுமானால், அரசு அதைப் பரிசீலிக்க வேண்டும். மேலும், இந்த அறிவிப்பு கண்டிப்பாக நன்மை பயக்கும் என்று கூறி அமர்கிறேன், நன்றி. (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் விதி 110-ன்கீழ் அறிவிப்பிற்கு நன்றி தெரிவித்த பிறகு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமுன்வடிவு கொண்டுவருதல் குறித்து உரையாற்றலாம். நீங்களும் நன்றியை கடைசியாக சொல்லுங்கள். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது அரசு இதுபோன்ற ஒரு சமாதான் திட்டத்தைக் கொண்டு வரவேண்டும் என்பது, வணிகர்களுடைய நீண்டகாலக்கோரிக்கையாகும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதுபோன்று, 2,11,607 வழக்குகள் நிலுவையில் உள்ளன. ரூ.25,000 கோடி நிலுவையில் உள்ளது. இதன் காரணமாக வணிக வரித் துறை அலுவலர்களுக்கும், வணிகர்களுக்கும் இருக்கக்கூடிய பிணக்குகளையும், பணிச் சுமைகளையும் நீக்கக் கூடியவகையில், சமாதான் திட்டத்தின்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறப்பான ஓர் அறிவிப்பினை அறிவித்ததற்குக் குறிப்பாக, சிறு வணிகர்களும் பயனடையக்கூடிய வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டு, விதி 110-ன்கீழ் கொண்டுவந்ததற்கு மனித நேய மக்கள் கட்சியின் சார்பாகவும், வணிகர்களின் சார்பாகவும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்து அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் தி. சதன் திருமலைக்குமார் அவர்கள்.

டாக்டர் தி. சதன் திருமலைக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு வணிகர்களின் உயர்வுக்காகவும், அவர்களின் வாழ்விற்காகவும், அவர்கள் வாங்கிய கடனுக்காகவும் அதனால் ஏற்படுகின்ற வட்டி, அபராதம் போன்றவற்றைக் குறிப்பிட்ட சதவிகிதம் தள்ளுபடி செய்து, அவர்களுக்குத் தீபாவளி

பரிசளித்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகக் கட்சியின் சார்பில் எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொண்டு வரவேற்கிறேன். வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ட்டி. இராமச்சந்திரன் அவர்கள்.*

திரு. ட்டி. இராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிகப் பெருமக்களுடைய நீண்டநாள் கோரிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமாதான் திட்டத்தின்மூலம் இன்றைக்கு நிறைவேற்றியிருக்கிறார்கள். குறிப்பாக, ரூ.50,000–க்குக் குறைவாக வரி செலுத்த வேண்டிய வணிகப் பெருமக்களுக்கு வட்டியும், அபராத வட்டியும் முழுமையாகத் தள்ளுபடி செய்யப்பட்டிருக்கிறது. ரூ.50,000 முதல் ரூ.10 இலட்சம் வரை வணிகம் செய்பவர்களுக்கு 20 சதவிகிதம் வட்டித் தொகை செலுத்தவும், பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டு, வணிகப் பெருமக்களின் நீண்டநாள் கோரிக்கையினை நிறைவேற்றிக் கொடுத்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் பாராட்டுகளையும், வாழ்த்துகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.பி. நாகைமாலி அவர்கள்.*

திரு. வி.பி. நாகைமாலி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு வணிகர்கள் மற்றும் சிறு வணிக நிறுவனங்களுடைய நலன் கருதி மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற இந்த விதி 110–ன்கீழான அறிவிப்புகளை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக முழுமையாக ஆதரிக்கிறேன். அதே நேரத்தில், சிறு வணிகர்களில் பாதிக்கப்படக்கூடிய வணிகர்கள் மட்டுமே இத்திட்டத்தில் பயன்படக்கூடிய வகையில் அரசு பார்த்துக்கொள்ள வேண்டுமென்பதையும் இந்த நேரத்தில் பதிவு செய்து இதனை முழுமையாக ஆதரிக்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. S.S. பாலாஜி அவர்கள்.*

திரு. S.S. பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பானது, மாண்புமிகு தளபதி அவர்களின் தலைமையிலான இந்த அரசு, சமூகத்திலுள்ள அனைத்துப் பிரிவு மக்களின்*

2023 அக்டோபர் 10] [திரு. S.S. பாலாஜி]

நலனையும் பாதுகாக்கின்ற ஓர் அரசாக உள்ளது என்பதை உறுதி செய்கின்ற ஓர் அறிவிப்பாகும். பல்வேறு அரசுகள், உலகம் முழுவதும் இருக்கக்கூடிய அரசுகள் well governed States என்கிற வகையிலே இருக்கலாம். இன்னும் சொல்லப்போனால் Governor ஆக இருப்பது ஒன்றும் பெரிய விஷயம் அல்ல. ஆனால், இந்த அரசு ஒரு welfare State என்பதை நிரூபிக்கின்ற வகையிலே இன்றைக்கு வணிகர் நலனை பாதுகாக்கின்ற இந்த அறிவிப்பை மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். வணிகர்களின் சார்பாகவும், விடுதலை சிறுத்தைகள் கட்சியின் சார்பாகவும், தலைவர் எழுச்சி தமிழர் அவர்களின் சார்பாகவும் நன்றி தெரிவித்து அமர்கிறேன். நன்றி.

முற்பகல் 11–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் வணிகப் பெருமக்கள் ஒரு தவிர்க்க முடியாத சக்தி. அதிலும் குறிப்பாக, அவர்கள் செலுத்த வேண்டிய வரித் தொகை 25,000 கோடி ரூபாய் என்பது அவர்களுக்கும் சுமை; வரி வசூல் செய்ய முடியாத அரசிற்கும் நிதி இழப்பாக இருக்கிற இந்தச் சூழலில் அதைச் சீர்செய்ய வேண்டுமென்ற உயர்ந்த நோக்கத்தோடு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சமாதான் திட்டத்தை விதி 110–ன்கீழே அறிவித்திருக்கிறார்கள். இதிலேயும் ரூபாய் 50 ஆயிரத்திற்கும் கீழே வரி செலுத்துபவர்களுக்கு முழுமையான தள்ளுபடி. இதில் பயனடைபவர்கள் ஏராளமானவர்கள் என்பதை மகிழ்ச்சியோடு எண்ணிப் பார்க்கிறோம். அதேபோல, 20 விழுக்காடு தள்ளுபடியோடு, மற்றவர்களுக்கும் வாய்ப்பு என்கிற ஓர் அறிவிப்பு. இது வணிகர்கள் மத்தியில் குறு, சிறு தொழில் செய்பவர்கள் வயிற்றில் பால் வார்த்ததாகக் கருதி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அறிவிப்பை நெஞ்சார வரவேற்று அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வபெருந்தகை அவர்கள்.

திரு. கு. செல்வபெருந்தகை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விற்பனை வரிச் சட்டம் 1956–1957–ல் பல ஆண்டுகளாக, 25 ஆண்டுகள், 50 ஆண்டுகளாகச் சிக்கலில் இருந்திருக்கின்றன.

எல்லா துறைகளையும் சீர்தூக்கி, செழுமைப்படுத்தி எழுச்சியோடு நடைபெற்றுக்கொண்டிருக்கக்கூடிய நமது மாண்புமிகு முதலமைச்சருடைய கண்காணிப்பில் இருக்கின்ற துறை, வருவாயை ஈட்டிக்கொடுக்கின்ற துறை, இந்த வணிக வரித் துறை. இந்தத் துறையையும் சீர்தூக்கி, செழுமையாக்கி அதை வளத்தோடு, வணிகர்களுக்கும், அதிகாரிகளுக்கும் உள்ள பிரச்சினைகளையெல்லாம் தீர்த்து, குறு, சிறு தொழிலும் இதனால் வளர்ச்சி பெறுவதற்கு ஓர் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. சிறு வணிகர்கள், நடுத்தர வணிகர்கள், பெரு வணிகர்கள் அனைவரும் பயன்பெற்று தமிழ்நாடு எழுச்சியோடு இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இந்த அறிவிப்பைச் செய்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு வணிகர்கள் சார்பாகவும், தமிழ்நாடு காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பாகவும் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2017 ஆம் ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரிகள் சட்டத் திருத்தம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பு நடைமுறையில் இருந்த சட்டங்களின் அடிப்படையில் விதிக்கப்பட்ட நிலுவையிலுள்ள வரி, தண்டத் தொகை மற்றும் வட்டி இனங்களைத் தீர்வு செய்வதற்கான ஒருமுறை தீர்வுத் திட்டமான சமாதான் திட்டத்தைத் தற்போது விதி 110–ன்கீழ் அறிவித்த, வணிகர்களின் நலனில் எப்போதும் அக்கறைக் கொண்டுள்ள நமது மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு, வணிக வரித் துறை சார்பாகவும், வணிகர்களின் சார்பாகவும் எங்களது நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம். மாண்புமிகு திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் திரு. ஈ.ஆர். ஈஸ்வரன் அவர்கள் கேட்ட கேள்விக்கு சமாதான் திட்டம் தொடர்பாகக் கூடுதலாக மேலும் சில விவரங்களை இந்த மாமன்றத்தில் சமர்ப்பிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

GST சட்டம் அறிமுகப்படுத்தப்படுவதற்கு முன்பாக, தமிழ்நாட்டில் மதிப்புக் கூட்டு வரிச் சட்டம், 2006 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது. இதனுடன் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு தமிழ்நாடு விற்பனை வரி (மேல் வரிச்) சட்டம் உள்ளிட்ட

மேலும், 10 சட்டங்கள் நடைமுறையில் இருந்து வந்தன. சமாதான் திட்டம் என்பது முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களின் சிந்தனையில் உதித்த சீரிய திட்டம் ஆகும். சமாதான் திட்டம் முதன்முதலாக முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் அவர்களால் 1999-ல் அறிமுகப்படுத்தப்பட்டு, அதற்குப் பின்னர் 2002, 2006, 2008, 2010 மற்றும் 2011 ஆகிய ஆண்டுகளில் சமாதான் திட்டம் செயல்படுத்தப்பட்டு, அதன்மூலம் வணிகர்களின் நீண்டகால வரி நிலுவைகள் கணிசமாகக் குறைக்கப்பட்டுள்ளன. தற்போது மாநிலம் முழுமைக்கும் 31-8-2022 அன்றைய தேதியில் முந்தைய பல்வேறு சட்டங்களின்கீழ் 2 இலட்சத்து 11 ஆயிரத்து 607 இனங்களில் மொத்தம் ரூ.24,894 கோடி வரி நிலுவையில் உள்ளது.

முற்பகல் 11-25

வணிகர்களின் நலனில் அக்கறை கொண்டுள்ள நமது அரசினை, பிற மாநிலங்கள் வியக்கும் வகையிலே வழிநடத்திக் கொண்டுவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இதுவரை இல்லாத அளவிற்குப் பல புதிய சலுகைகளோடு பழைய நிலுவைத் தொகைகளை வசூலிப்பதற்காகப் புதிய அணுகுமுறையிலான சமாதான் திட்டத்தினையும் அறிவித்திருக்கிறார்கள். இத்திட்டத்தின்கீழ் வரி நிலுவை வைத்திருக்கும் வணிகர்கள் 5 பிரிவுகளாகப் பிரிக்கப்படுகின்றனர்.

முதலாவதாக, ஒரு வரி விதிப்பு ஆண்டில் ரூபாய் ஐம்பதாயிரத்திற்குக் குறைவான வரி, வட்டி, அபராதத் தொகை செலுத்த வேண்டியவர்கள் பெரும்பாலும், சிறு வணிகம் செய்யும் எளிய வணிகர்களாகவே இருப்பார்கள். இந்த வணிகர்கள் செலுத்த வேண்டிய வரி, வட்டி, அபராதத் தொகை ஒவ்வொரு வரி விதிப்பு ஆண்டிற்கும் ரூபாய் ஐம்பதாயிரத்திற்கும் குறைவாக இருந்தால், அது முற்றிலுமாகத் தள்ளுபடி செய்யப்படும் என மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்கள். ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு மேல் வரம்பானது ஒவ்வொரு வரி விதிப்பு ஆண்டிற்கும் பொருந்தும். அதாவது எளிய வணிகர்கள், அவர்கள் செலுத்த வேண்டிய வரி நிலுவை ஒவ்வொரு வரி விதிப்பு ஆண்டிற்கும் தனித் தனியாக ரூபாய் ஐம்பதாயிரத்திற்கு உட்பட்டிருந்தால், அது முழுமையாகத் தள்ளுபடி செய்யப்படும். இது போன்றதொரு சலுகை வழங்குவது தமிழக வரலாற்றிலேயே இதுதான் முதல் முறையாகும். இதன்கீழ் சுமார் ஒரு இலட்சத்து 45 ஆயிரத்து நான்கு இனங்களில் ஏறக்குறைய 1 இலட்சம்

எளிய வணிகர்கள் பயன் பெறுவார்கள். மொத்தம் ரூபாய் 147 கோடி நிலுவை முற்றிலுமாக இவ்வினங்களின் பொருட்டு தள்ளுபடி செய்யப்படுகிறது. வரி நிலுவை செலுத்த வேண்டிய எஞ்சிய வணிகர்கள், ரூபாய் 50 ஆயிரம் முதல் ரூபாய் 10 இலட்சம் வரை நிலுவை உள்ளவர்கள், ரூபாய் 10 இலட்சம் முதல் ரூபாய் 1 கோடி வரை வரி நிலுவை உள்ளவர்கள், ரூபாய் 1 கோடி முதல் ரூபாய் 10 கோடி வரை நிலுவை உள்ளவர்கள் மற்றும் ரூபாய் 10 கோடிக்கும் மேலாக நிலுவை உள்ளவர்கள் என நான்கு வரம்புகளின்கீழ் கொண்டுவரப்படுகிறார்கள். முதல் வரம்பின்கீழ், அதாவது ஒரு வரி விதிப்பு ஆண்டிற்குச் செலுத்த வேண்டிய நிலுவை வரி, வட்டி மற்றும் அபராதத் தொகை ரூபாய் 50 ஆயிரத்திலிருந்து ரூபாய் 10 இலட்சம் வரை இருந்தால், அதைச் செலுத்த வேண்டிய வணிகர்களுக்கு 2 விதமாகச் சலுகைகள் வழங்கப்படும். முதலாவதாக, வரி, வட்டி மற்றும் அபராதத் தொகையின் மொத்தத் தொகையில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர், விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததைத்தானே திரும்பவும் repeat செய்கிறீர்கள்?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: இல்லை, இல்லை, வட்டியைப் பற்றி கூறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள், விதி 110–ன்கீழான அறிவிப்பை வரவேற்று, நன்றி சொல்லிவிட்டு அமருங்கள்.

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி: விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட அறிவிப்பை வரவேற்று அமர்வதோடு, மாண்புமிகு உறுப்பினர்கள் கூறியதைப்போல, அந்த 4 முறையாக இருக்கக்கூடிய வட்டிக்கு 10 சதவிகிதம் அபராதம், அதைப்போல 15 சதவிகிதம் வட்டி விகிதம் என்ற 4 வரம்புகளின்கீழ் இன்றைக்கு அறிவிக்கப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.